இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 09-05-2025

# “ஆமாம்! மிரட்டல்தான்!”

திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் உரையாற்றிய கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

**“பா.ஜ.க. தமிழ்நாட்டில் எப்படியாவது காலூன்ற நினைக்கிறது. அதற்கு அனைத்து விதமான அச்சுறுத்தலையும் செய்து அ.தி.மு.க.வை அடக்கி விட்டது. பழனிசாமிக்கும் வேறு வழியில்லை, பா.ஜ.க. கூட்டணியை ஏற்றுக் கொள்ளாவிட்டால் சொந்தக் கட்சியில் அவர் தலைமைக்கே சிக்கல் வரும் என்று பயப்படுகிறார். அதனால் பா.ஜ.க. கூட்டணியை ஏற்றுக் கொண்டு விட்டார். பலவிதங்களில் மிரட்டித்தான் அ.தி.மு.க.வை பணிய வைத்திருக்கிறார்கள். பா.ஜ.க.வுடன் அமைக்கப்பட்டிருக்கும் கூட்டணியால் பல அ.தி.மு.க.வினர் அதிருப்தியில் உள்ளனர்”** என்பது அவரது உரையின் உள்ளடக்கம் ஆகும்.

இதற்குப் பதில் அளித்திருக்கும் பழனிசாமி, “எங்களைப் பார்த்து ஸ்டாலின் பயந்துவிட்டார். நாங்கள் பா.ஜ.க.வுடன் மகிழ்ச்சியாகத்தான் கூட்டணி வைத்துள்ளோம்” என்று சொல்லி இருக்கிறார்.

“எங்களுக்கும் பா.ஜ.க.வுக்கும் கொள்கை ரீதியான உடன்பாடு ஏற்பட்டு விட்டது, அதனால்தான் கூட்டணி வைத்துள்ளோம்” என்று பழனிசாமியால் சொல்ல முடியவில்லை. மாறாக, ‘மகிழ்ச்சியாகத்தான் கூட்டணி வைத்துள்ளோம்’ என்று சொல்கிறார் பழனிசாமி. கூட்டணிக்கும், மகிழ்ச்சிக்கும் என்ன சம்பந்தம்? இது என்ன கல்யாண சம்பந்தமா?

அதில் மகிழ்ச்சி இல்லை என்பதை உள்துறை அமைச்சர் அமித்ஷா - பழனிசாமி ஆகிய இருவரும் நடத்திய பத்திரிக்கையாளர் சந்திப்பைப் பார்த்தாலே தெரியுமே? மூன்று தடவைகள் பத்திரிக்கையாளர் சந்திப்புக்கான ‘பேனர்’ மாற்றப்பட்டது. இது கூட்டணிக்கான சந்திப்பாக முதலில் இருந்தது. பின்னர், அது பா.ஜ.க. சந்திப்பாக மாற்றப்பட்டது. மீண்டும் கூட்டணிக்கான சந்திப்பாக பெயரை மாற்றிக் கொண்டே இருந்தார்கள். இடைப்பட்ட நேரத்தில் பழனிசாமி ‘கதி’ என்ன ஆனது என்பது ஊருக்கே தெரியும்.

**அந்தப் பத்திரிக்கையாளர் சந்திப்பில் பழனிசாமியை அமித்ஷா பேசவிடவில்லை. எல்லா விமான நிலைய வாசல்களிலும் வாய்க்கொம்பு சுற்றும் பழனிசாமி, அடக்கமாக கை கட்டி அன்று உட்கார்ந்து இருந்தார். அவரை ஒரு மரியாதைக்குக் கூட, ‘கூட்டணியை உருவாக்கி இருக்கிறோம்’ என்று சொல்ல அமித்ஷா அனுமதிக்கவில்லை. தான் சொல்ல வந்ததைச் சொல்லி விட்டு, அமித்ஷா கிளம்பினார். ‘எங்களுக்கு கட்சி நடத்தத் தெரியும், நாங்கள் கட்சி நடத்திக் கொள்கிறோம், தேவையில்லாத கேள்வி கேட்கக் கூடாது’ என்று நிருபர்களை எச்சரித்துவிட்டு விருட்டென்று வெளியேறினார் அமித்ஷா.**

கூட்டணி உருவானால், ‘இருவரும் இணைந்து கை தூக்க வேண்டும்’ என்று சொல்லி அமித்ஷாவை அழைத்து வந்தார்கள். அதன்பிறகு தான் வேண்டா வெறுப்புடன், பழனிசாமியுடன் கை தூக்கினார். இவை அனைத்தும் ரகசியங்கள் அல்ல, ஊடகங்களில் மக்கள் பார்த்தவைதான். ஊடகங்களில் இன்றும் இருப்பவைதான்.

**சென்னைக்கு அமித்ஷா வருவதற்கு முன்னால், டெல்லிக்குச் சென்றார் பழனிசாமி. ‘மகிழ்ச்சியான சந்திப்பாக’ இருக்குமானால் சென்னை விமான நிலையத்திலும், டெல்லி விமான நிலையத்திலும் சொல்லிவிட்டே போயிருக்கலாம், தவறில்லை. பா.ஜ.க.வுடன் கூட்டணி பேசப் போகிறேன், உள்துறை அமைச்சரைச் சந்திக்கப் போகிறேன் என்று சொல்வது ‘குற்றச் செயலும்’ ஆகாது. ஆனால் பழனிசாமியால் சொல்ல முடியவில்லை. மூன்று வாகனங்கள் மாறிப் போய் அமித்ஷாவைப் பார்க்கும் அளவுக்கு அது தவறான செயலும் அல்ல. ‘நான் அ.தி.மு.க. அலுவலகத்தைப்பார்க்க வந்தேன்’ என்று சொல்லிவிட்டு அமித்ஷாவை பார்க்கப் போனதுதான் மர்மத்தின் தொடக்கம் ஆகும்.**

அது வரை என்ன சொல்லிக் கொண்டிருந்தார் பழனிசாமி. பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று சொல்லி வந்தார். பா.ஜ.க.வின் கையெழுத்து இயக்கத்தில் கையெழுத்துப் போட்ட முன்னாள் எம்.எல்.ஏ.வை கட்சியை விட்டு நீக்கினார். ‘அண்ணாமலைக்கு என்ன தெரியும்?’ என்று கேட்டார். ‘2026 ஆம் ஆண்டு மட்டுமல்ல, 2031 ஆம் ஆண்டும் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை’ என்று சொன்னார். ‘பா.ஜ.க.வுடன் சேர்ந்ததால்தான் தோற்றோம்’ என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்தார். அதையே பலரும் வழிமொழிந்து கொண்டிருந்தார்கள்.

**இத்தகைய சூழலில் தான் பழனிசாமியின் உறவினர்களுக்குச் சொந்தமான 26 இடங்களில் ரெய்டு நடந்தது. ‘750 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்த எடப்பாடியின் உறவினர்’, என்று ஊடகங்கள் அனைத்தும் செய்தி வெளியிட்டன. பழனிசாமி, மீண்டும் பா.ஜ.க.வின் பாதத்தில் சரணாகதி அடைந்தார். அவர் மிரட்டப்பட்டது பட்டவர்த்தனமாகவே ஊருக்கு அம்பலம் ஆனது. இதை மறைக்க தி.மு.க. மீது பாய்கிறார் பழனிசாமி. அவர் எடுத்த அரசியல் முடிவு அ.தி.மு.க.வையே பழிவாங்கப் போகிறது என்பதை அ.தி.மு.க. தொண்டர்கள் உணர்ந்து வருகிறார்கள் என்பதுதான் முழு உண்மை ஆகும்.**

“பா.ஜ.க. - அ.தி.மு.க. இடையே கள்ளக் கூட்டணி இருக்கிறது” என்று சொல்லி வந்தார் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். அந்தக் கள்ளக் கூட்டணி மெள்ள மெள்ள வெளிச்சத்துக்கு வந்து வெளிப்படையான கூட்டணியாக மாறி இருக்கிறது. இதற்குக் காரணம், ‘அமித்ஷாவின் மிரட்டல்தான்’.

ஏனென்றால், “இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகம் ஊழல் நடக்கிறது” என்று பழனிசாமி முதலமைச்சராக இருந்த போது 9.7.2019 அன்று சொன்னவர் அமித்ஷா. இன்று அவர் எப்படி பழனிசாமியுடன் கைகோர்த்தார்? பா.ஜ.க. தனியாக நின்றால் டெபாசிட் கூட கிடைக்காது என்பதை அமித்ஷா அறிவார்.

தன்னைக் காக்க பழனிசாமியும், தனது கட்சிக் காக்க அமித்ஷாவும் அமைத்துள்ள சுயநல - ஊழல் கூட்டணிதான் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி ஆகும்.



அரசு பொறுப்பேற்று நான்காண்டுகள் நிறைவு பெற்று ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.5.2025) முகாம் அலுவலகத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., தயாநிதிமாறன் எம்.பி., ஆ.ராசா எம்.பி., ஆகியோர் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து, பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் குறித்த பகுப்பாய்வு அறிக்கையை அளித்தார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்திரமோகன் ஆகியோர் உள்ளனர்.

## செம்பனார்கோயில் மிசா பி.மதிவாணன் நினைவு நாள் நிகழ்ச்சி!

மயிலாடுதுறை, மே 9-

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம். அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர் ஆகியோர் தந்தை ஒன்றிய முன்னாள் செயலாளர் மிசா பி.மதிவாணன் 2ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 500 மாற்றுதிறனாளிகளுக்கு உதவித் தொகை மற்றும் மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது. மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர், நிவேதா எம்.முருகன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் கழக உயர் நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அனபழகன், ஆர். அருள்செல்வம், வை.சௌமியன், ஏ.சி.என்.விஜயபாலன், எம்.எம்.சித்திக், இராம. இளங்கோவன், முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, கே.ஜி.சீனிவாசன், மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், பொருளாளர் மகா. அலெக்சாண்டர், மூவலூர் எம்.மூர்த்தி, என்.இளையபெருமாள், ஞான.இமையநாதன், பி.முருகமணி, மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், பஞ்சு.குமார், ஏ.ஜி. ஜெ.பிரபாகர், செல்லசேதுரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், குண்டாமணி (எ) என். செல்வராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



அரசு பொறுப்பேற்று நான்காண்டுகள் நிறைவு பெற்று. ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.5.2025) அண்ணா அறிவாலயத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர், தொல். திருமாவளவன் எம்.பி. சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச் செயலாளர் கௌதமசன்னா, தலைமை நிலைய செயலாளர் பாலசிங்கம், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.



அரசு பொறுப்பேற்று நான்காண்டுகள் நிறைவு பெற்று, ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.5.2025) அண்ணா அறிவாலயத்தில், எஸ்.வி. சேகர் சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார்.




சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்ட அரங்கில் நேற்று (08.05.2025) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பள்ளிக் கல்வித் துறை, அரசுத் தேர்வுகள் இயக்ககம் சார்பில் மார்ச் 2025ல் நடைபெற்ற 2024–2025ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத்தேர்வு முடிவுகளை வெளியிட்டார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், பள்ளிக் கல்வித் துறை தேர்வுகள் இயக்கக இயக்குநர் திருமதி ந.லதா, இணை இயக்குநர்கள் இராமசாமி (மேல்நிலைப்பள்ளிகள்), திருமதி கே.பி.மகேஸ்வரி (பணியாளர்கள்) மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.